# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

-----

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, No.I, PERAMBALUR.**

| | | |
|---|---|---|
| Calendar | : | CC. No.184/2016 |
| Miscellaneous | : | |
| preliminary Register | : | |
| Sessions | : | |

| | | |
|---|---|---|
| DEPOSITION OF WITNESS for | Prosecution<br>Defence<br>Court | அ.சா.1 |

| | | |
|---|---|---|
| Name | : | **பிரதீப்** |
| Father's/Husband Name: | | சுப்ரமணியன் |
| Village | : | எசனை |
| Taluk | : | பெரம்பலூர் |
| Age | : | 29/2021 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 11.01.2021

முதல் விசாரணை

நான் சென்னையில் ஜி.ஜி.எஸ் என்ஜினியர் சர்வீஸ் ஆக பணிபுரிந்து வருகிறேன். எதிரி இன்று நீதிமன்றத்திற்கு வரவில்லை அவரை எனக்கு தெரியும். எனது நண்பர் ராஜேந்திரன் மகன் பூபாலன் என்பவர் மூலமாக எதிரி கலைமணி எனக்கு அறிமுகமானார். பூபாலன் அடிக்கடி சிங்கப்பூர் சென்று வந்துள்ளார் அதனால் அவரிடம் நானும் சிங்கப்பூர் செல்ல வேண்டும் என்று கூறினேன். அதனால் அவர் தஞ்சாவூர் மாவட்டம், நீடாமங்கலம் முல்லைவாசல் கிராமத்தை சேர்ந்த சதாசிவம் மகன் எதிரி கலைமணி என்பவரை அறிமுகம் படுத்தினார். அவர் அறிமுகம் படுத்தியதன் பெயரில் நான் அவரை தொலைபேசியில் தொடர்புக்கொண்டு பேசினேன். அவர் என்னுடைய படிப்பினை கேட்டறிந்து சான்றிதழ் அனைத்தையும் அனுப்பு மாறு கூறினார். நான் எனது சான்றிதழை மெயில் மூலம் அனுப்பி வைத்தேன். அதற்கு எதிரி கலைமணி நீ B.E படித்திருக்கிறாய் அதற்கு வெளிநாட்டில் நல்ல சம்பளம் கிடைக்கும் என கூறி சிங்கப்பூர் அனுப்பி வைக்க ரூ.4,00,000/- ஆகும் என்று கூறினார் அதற்கு முன்பணமாக ரூ.98,000/- வங்கி கணக்கில் செலுத்துமாறு கூறினார். அவர் கூறிய வங்கி கணக்கில் ஐ.சி.ஐ.சி.ஐ பேங்க் சிறுவாச்சூர் கிளையில் இருந்து அனுப்பினேன். அனுப்பிய ஒரு வாரத்தில் விசா ரெடியாகிவிட்டது மீதமுள்ள தொகையை செலுத்துமாறு கூறினார். அவர் கூறியதன் பெயரில் நான் எனது தந்தை சுப்ரமணியன் எனது மாமா சரவணன், ஆகியோர் நேரில் சென்று நீடாமங்கலம் முல்லைவாசல் எதிரியின் வீட்டிற்கு சென்று மீதமுள்ள ரூ.2,50,000/- தொகையை ரொக்கமாக எதிரியின் கையில் கொடுத்தோம். அந்த பணத்தை கொடுக்கும் போது கொடுத்ததற்கு சாட்சியாக மொபைல் சாதனம் மூலம் வீடியோ எடுத்துக்கொண்டேன். அதற்கான சிடி ஆவணம் போலீசாரிடம் கொடுத்துள்ளேன். நீண்ட நாட்கள் ஆகியும் என்னை வெளிநாட்டிற்கு அனுப்பவில்லை தொடர்ந்து நான் தொலைபேசியில் எப்பொழுது அனுப்புவாய் என்று கேட்டப்பொழுது எனக்கு டூப்லிகேட் டிக்கெட் ஒன்றை கொடுத்தார். அதை எனது நண்பரிடம் காண்பித்து விசாரித்த போது அது டூப்லிகேட் டிக்கெட் என தெரியவந்தது.

அதனால் நேரில் சென்று கேட்டப்போது விசா காலம் உள்ளது நான் வேற ஒரு டிக்கெட் எடுத்து தருகிறேன் என்று கூறி டிக்கெட் போட்டார் அதிலும் என்னை அனுப்பவில்லை. ஆகையால் விசா காலமும் முடிந்து விட்டது. இனி எனக்கு நீங்கள் விசா போட வேண்டாம், டிக்கெட் போட வேண்டாம் என்று கூறி பணத்தை திருப்பி தருமாறு கேட்டேன். அதற்கு அவர் 11.03.2015 ஆம் தேதியன்று பணம் வாங்கியது உண்மை என்றும் அதை நான் திருப்பி தருகிறேன்என்று எனது உறவினர் முன்னிலையில் பத்திரம் எழுதிக்கொடுத்தார். அந்த பத்திரம் **அ.த.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அவரிடம் பலமுறை நேரில் சென்று கேட்டபொழுது என்னால் உனக்கு பணம் தரமுடியாது உன்னால் முடிந்ததை செய்துக்கொள் இதற்கு மேல் என்னிடம் கேட்டால் உன்னை கொன்று விடுவேன் என கொலை மிரட்டல் செய்தார் ஆதலால் நான் பெரம்பலூர் எஸ்.பி.அலுவலகம் சென்று புகார் கொடுத்தேன். தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் நான் கொடுத்தது தான் **அ.த.சா.ஆ.**2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. வழக்கு சம்மந்தமாக DCB போலீசார் என்னை விசாரணை செய்தார்கள். இது நாள் வரையில் எனக்கு எந்த பணமும் அவரிடம் இருந்து கிடைக்கவில்லை. பின்னர் புகார்க்கு பிறகு ராஜமாணிக்கம் என்னிடம் வந்து அவரது வங்கியில் எதிரிக்காக செலுத்திய ரூ.98,000/– என்னிடம் திருப்பி கொடுத்துவிட்டார். மீதமுள்ள ரூ.2,95,000/– எதிரி கலைமணி இதுநாள் வரை தரவில்லை.

குறுக்கு விசாரணை

ஆஜர் வழக்கறிஞர் அழைத்தும் ஆஜர் இல்லை. ஆகவே எதிரி தரப்பு வழக்கறிஞர் குறுக்கு விசாரணை முன்வரவிருப்பம் இல்லை என அறியப்பட்டு இத்துடன் குறுக்கு விசாரணை முடித்துக்கொள்ளப்படுகிறது.